# கிழக்கிலங்கைப் பிராந்திய நாட்டாரியலில் இலத்திரனியல் ஊடகங்களின் தாக்கமும் நாட்டாரியலின் சிதைவு நோக்கிய பயணமும்

முஹம்மட் றமீஸ், எம்.ஏ.

கிழக்கிலங்கைப் பிராந்தியம் நாட்டாரியலுக்குப் பெயர் போனது. இப்பிராந்தியத்தின் வயலும் கடல் வளமும் இயற்கை வனப்பும் வாழ்க்கை முறையும் ஓரிலக்கியமாகவே அமைந்துவிட்டது. இவ்விலக்கியம் மூலம் அம்மக்களின் எல்லாப் பதிவுகளையும் பெறக்கூடியதாக இருக்கிறது. பெரிதும் படிப்பறிவற்ற பாமர மக்களாலே பாடப்பட்ட இவ்விலக்கியம் அம்மக்களின் வாழ்க்கைமுறை மாற மாற மறைந்து செல்கின்ற நிலைமையை இன்று அடைந்துவிட்டது.

இம்மக்களின் நாட்டாரியல் பண்பினை அறிவதற்கு முன்னர் இவர்களின் வாழ்க்கைப் பாரம்பரியத்தையும் மரபுகளையும் அறியவேண்டியுள்ளது. குறிப்பாக இப்பிரதேச முஸ்லிம்களும் தமிழர்களும் தாய்மொழியாக தமிழையே கொண்டிருப்பது இம்மக்களின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது. எனவே, இந்நாட்டாரியல் மரபு இவ்விரு சமூகத்திற்கும் உடையதாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆனால், சமூகங்களின் அடிப்படையில்அந்நாட்டார்இலக்கியங்களிலுள்ள சொற்றொடர்களும் வேறுபட்டிருப்பதையும் காணமுடிகிறது. எனவே, நாட்டாரியல் பண்பாடு இப்பிரதேச மக்களின் வாழ்வியலைத் தூக்கிப்பிடிக்கின்ற மிகச் சிறந்த ஓர் ஆவணமாகும்.

நாட்டாரியலை இலக்கியமாகக் கொள்ளுமிடத்து அதனது பாடல், பழமொழிகள், விடுகதைகள், கதைகள் என்பன பற்றிப் பிரதானமாகப் பேசவேண்டியிருக்கிறது. ஒரு நாட்டின் கலாசாரப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சமாகத் திகழும் நாட்டார் பாடல்கள் அம்மக்களின் மனச்சாட்சியாகத் திகழ்கின்றன.

> “மனக் கிடக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் மற்றவர்களுடன் தொடர்பாடலை விடாமல் இருப்பதும் உயிர் வாழ்ந்திருக்க உதவுவனவாகும். நாட்டார் பாடல்களின் உள்ளடக்கம் பற்றிச் சுருக்கமாகக் கூற வேண்டுமாயின் அவையும் ஏனைய கலைப் படைப்புக்களைப் போலவே கூடுதலான சுதந்திரத்தையும் இன்பத்தையும் ஒளியையும் அவாவி நின்ற உள்ளங்களில் அமிழ்ந்திருந்த ஆசைகளை வெளியிடுவன எனலாம்.” என சி. தில்லைநாதன் (1993:26) குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.
>
> “நாட்டுப் பாடலானது சாதாரண மக்களின் ஒரு பரம்பரைச் சொத்து. கல்வி பெறாத கிராமவாசிகள் தமது நாளாந்த தொழில் அரங்கில் தாமே பாடத் தாமே கேட்டுச் செவிக் கருவியாய் மனதில் தாமே எழுதிப் பிரசுரம் செய்து இதை வளர்த்து வருகின்றனர். வயல் உழுகிறவர்கள், வேளாண்மை வெட்டுவோர், சூடு மிதிப்போர், நீர் இறைப்போர், மீன் பிடிப்போர், வண்டி ஓட்டுவோர் தமது உடல் நோ மறந்து பாடுகின்ற பாடல் நாட்டுப்பாடல். எழுத்தறிவு இல்லாத இத்தகைய தொழில் மக்களின் உள்ளத்திலே பொங்குகின்ற உணர்ச்சி கவிதையாகப் பெருகுவதுண்டு. இப்பெருக்கிலே இசையின்பம், தாளக்கட்டு, சொல்லழகு, தொடைச்சிறப்பு என்பன இருக்கும். சில பாடல்கள் இலக்கண வரம்புக்குட்பட்டிருக்கும். பல அவ்வரம்பை மீறி நடக்கும். எழுதா மறையாயுள்ளன இப்பாடல்கள்.
>
> கால வெள்ளம் இவற்றை கரைத்திலது, கடல் வெள்ளமும் அரித்திலது, நெருப்பின் நா இவற்றின் சுவையறியாது, ஏட்டிலேறாவிடினும் இவ்வாறு தோன்றும் எந்த இன்னலினாலும் அழிந்து போகாது. தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் சிறப்பைக் கொண்டு நம்மை வியப்புக்குள்ளாக்கும் உயிரும் ஆற்றலும் படைத்த இலக்கியமாகவுள்ளது. நாட்டுப்பாடல்” என மட்டக்களப்புத் தமிழகம் (கந்தையா வி.சி., 1964:25) கூறுகின்றது.

இவ்வாறு தனித்துவமான சந்தர்ப்ப சூழ்நிலையையும் இசை மரபையும் கொண்ட இப்பாடல்களை இன்று எவ்வாறு மீண்டும் அதே அமைப்பில், அதே தொனியில் கேட்பது என்ற பிரச்சினை இருக்கிறது. அதனது இசையையும் கதையையும் மொழியையும் உயிருடன் இன்று காணமுடியாது உள்ளது.

அதேபோல தொன்றுதொட்டு வாழும் மனித சமூகத்தின் வரலாற்றுப் பாரம்பரியத்தை உணர்த்தும் வாய்மொழி இலக்கிய வடிவங்களுள் பழமொழி முக்கிய இடம்பெறுகின்றது. பழமொழியைக் கொண்டு ஒரு நாட்டின் பாரம்பரியத்தையே அறிந்துகொள்ளலாம் என்பர்.

> "பழமொழி என்பது ஒரு பொருட்செறிவுள்ள வாக்கியம். அனுபவமிக்க உண்மையை அது சுருக்கமாக வெளியிடுகின்றது. உண்மையானது அரைகுறையாக இருந்தாலும் உயர்வுப்படுத்தப்பட்டு உருவக வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றது" என சு. சண்முகசுந்தரம் (1975:215) குறிப்பிடுகின்றார்.

பொதுவாக நாட்டாரியல் வடிவங்களுள் மிகச் சுருக்கமான இப்பழமொழிகளை இன்று கேட்பதும் ஆவணப்படுத்துவதும் நம்மிடையே இல்லாமலாகி விட்டது. அதேபோன்று மனித சமூகத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தினைத் துலக்கும் விடுகதைகள் தம் வரலாற்றின் காற்றோடு கலந்து மறைந்துவிட்டது போலாகிவிட்டது.

தமிழில் விடுகதை இலக்கியங்களைப் பற்றி ஆய்வு செய்த ச.வே. சுப்பிரமணியன் (சிவநேசச் செல்வன், ஆ., 1978) விடுகதைகளின் தற்கால நிலைமைகள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> "ஆராய்ச்சிக்கு நாணயங்களும் கல்வெட்டுக்களும் எவ்வளவு தூரம் இன்றியமையாததோ அவ்வளவு பழமொழிகளும் அதி முக்கியமானவை என்பதனைக் கீழைத்தேய கல்வியியலாளர் இப்பொழுதுதான் உணர்ந்து வருகின்றார்கள். முன்னையவை அரசர்களினதும் மேல் வகுப்பினரதும் பற்றிய செய்திகளைப் பெரும்பாலும் தருவது போல பழமொழிகள் சமூக வாழ்க்கையின் இருண்ட பகுதியை உணர்த்துவதாகவுள்ளன. பழமையான நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் வரலாற்றினையும் மனித உணர்வுகளையும் காட்டுபவைகள் பழமொழிகளே" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் விடுகதையின் பயன்பாட்டு வீழ்ச்சி பற்றி இராஜரெட்ணம், எம்., ஆனந்தன், வீ., (1993) ஆகியோரின் பின்வரும் கருத்தும் மிகுந்த கவனத்துக்குரியது.

> "கால சூழ்நிலைப் பாதிப்பும் நாகரிக முன்னேற்றமும் வளர்ச்சிக்குத் தடைகளாக நிற்பதுடன் தற்கால உரைநடைப் போக்கும் உரையாடல்களிடையே கேளிக்கைப் பண்பு மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதும் விடுகதை இலக்கியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன எனலாம். படைப்பு மன்பபான்மையை உருவாக்குவதே விடுகதைகளின் முக்கிய குறிக்கோளாகும். இன்று விழாக்கால விடுகதைகள் படிப்படியாகக் குறைந்தும் மறைந்தும் பொழுதுபோக்கு விடுகதைகள் பொழுதுபோக்குக் கருவியாக மாறிப் பாமர மக்களிடையே வாழ்ந்தும் வளர்ந்தும் கொண்டிருக்கும் நிலைமைகளைக் காண்கிறோம்."

உண்மையில் விடுகதைகள் ஆரம்பத்தில் பெரியவர்களால் இரவில் ஓய்வு வேளையில் சிறுவர்களுக்குச் சொல்லப்பட்டு வந்தே வளர்ச்சியுறத் தொடங்கிற்று. இதனை நொடி போடுதல் என்றும் அதற்கு விடையிறுப்பதை நொடி அவிழ்த்தல் என்றும் வழங்குவர். இன்று விடுகதைகளும் வெகுவாகக் குறைந்து மிக அடிப்படையாக கிராமத்திலே மாத்திரம் வெகு அரிதாக புழக்கத்தில் உள்ளது எனலாம்.

வாய்மொழி இலக்கிய மரபில் தொன்றுதொட்டு வழங்கும் நாட்டார் கதைகள் இன்று நம்மைவிட்டும் வெகு தூரமாகிவிட்டது. நாட்டார் வழக்காறுகளுள் நாட்டார் கதைகள், பழமரபுக் கதைகள், புராணக் கதைகள் போன்றவைகளும் அடங்கும். இவ்வகை வாய்மொழி இலக்கியங்கள் முறையாகத் தொகுக்கப் பெறவுமில்லை, ஆய்வு செய்யப் பெறவுமில்லை என தே. லூர்து (1981) குறிப்பிடுகின்றார்:

> "சிறுகதைகளையும் நாவல்களையும் போன்று நாட்டுப்புறத்து மக்களில் சிறிது கற்பனை ஆற்றல் உள்ளவர்கள், தங்கள் வாழ்வில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் சுவைபடச் சொல்லி வந்தனர். நாட்டுப்புறத்து மக்கள் சொல்லி வந்த கதைகள் நாட்டுப்புறத்துக் கதைகள் என்று பெயர் பெற்றன".

என சு. சண்முகசுந்தரம் (1978:231, 232) நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம் என்ற அவரது நூலில் குறிப்பிடுகின்றார்.

> “பொதுவாக நாட்டார் கதைகள் உரைநடையில் எடுத்துரைக்கப்படுபவை. ஆனால், கற்பனையாகப் புனைந்து கூறப்படுவதை அவை வரலாறுகள்; சமயக் கோட்பாடுகளுமல்ல. அவற்றை முக்கியமான ஒன்றாகவே யாரும் கருதுவதில்லை. அடிக்கடி அவை கூறப்பட்டாலும் அவை பொழுதுபோக்காகவும் நீதி போதனைகளுக்காகவும் சொல்லப்படும்”.

என்று லூர்து (1981) குறிப்பிடுகின்றார். ஆனால், உண்மையையும் வரலாற்றையும் போதிக்கும் நாட்டார் கதைகளும் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமூகப் பண்பாட்டு வளர்ச்சியில் மிக முக்கியத்துவம்பெறும் நாட்டார் கதைகள் நம்மிடம் இல்லாமலே ஆகிவிட்டது. சமூக ஒழுக்கத்தையும் அறத்தையும் தருமத்தையும் இலகுவாக சிறுவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்ல இது பெரிதும் பயன்பட்டு வந்தது. மொத்தத்தில் நாட்டாரியல் மரபிலே இன்று இருக்கின்ற பிரச்சினை இவற்றினைப் பாதுகாக்க வேண்டியதும் ஆவணப்படுத்த வேண்டியதுமாகும். இந்தத் தேவைகளை அச்சு வழியாகவும் இலத்திரனியல் வழியாகவும் மேற்கொள்ள முடியும்.

அச்சு வழியாக ஆவணப்படுத்துகிற போதுகூட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பாமர மக்களின் அதே சொற்றொடர்களை நாம் பயன்படுத்துகிறோமா? என்ற கேள்வி இருக்கிறது. சிலவேளைகளில் அவற்றினைச் சற்று செம்மைப்படுத்துவதாகவும் எழுத்து வழக்கினைப் பேணி மாற்றுகிற தன்மையைக் கொண்டதாகவும் காணமுடிகிறது. சிலவேளைகளில் அதனை உரிய இடத்திலிருந்து பெறாது அதனைத் தொகுப்பவர் தமது அனுபவம், அறிவு முதலானவற்றைக் கொண்டு தனது சிந்தனைக் கலப்புடன் அல்லது மொழியாற்றலுடன் ஆக்கி விடுவதையும் காணமுடிகிறது.

இலத்திரனியல் வழியாக இவற்றினை ஆவணப்படுத்துகிறபோது அதன் ஒலி, ஒளிபரப்பில் இதன் உண்மைத்தன்மை பெரிதும் மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாகச் சில பாடல் வடிவங்கள் பற்றிக் குறிப்பிட முடியும். சிறுவர் விளையாட்டுப் பாடல்களில் ஒலி, ஒளிபரப்புச் செய்கிறபோது உண்மையாக சிறுவர்கள் அவற்றிலே ஈடுபடுகின்றபோது - களத்திலே சென்று தொகுக்க வேண்டிய கட்டாயமிருக்கின்றது. அதேபோன்று மருத்துவிச்சிப் பாடல், தாலாட்டுப்பாடல் முதலானவற்றை ஒலி, ஒளிபரப்பும்போது இயல்பாகவே அப்பாடல்களைப் பாடுகின்றவர்களைக் கொண்டு அவற்றினை மேற்கொள்வது பொருத்தமாக அமையும். கடற்தொழிலிலே ஈடுபடுகிற மீனவர்கள் பாடுகிற ‘அம்பா’ பாடலை அல்லது வேளாண்மை நடவடிக்கையில் ஈடுபடுகிறபோது விவசாயிகள் பாடுகிற வேளாண்மைப் பாடலை அப்பிராந்தியத்திலே - அக்களத்திலே சென்று பதிவுசெய்ய வேண்டிய தேவையிருக்கிறது. காதல் பாடல்களை அவ்வாறு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருப்பினும் கவியினை வாலயமாகப் பாடுகிறவர்களைக் கொண்டு இவற்றினைப் பதிவு செய்யலாம்.

ஆனால், இலத்திரனியல் ஊடாக போலச் செய்தல் மரபொன்றினைப் பின்பற்றியே இவற்றினைச் செய்வதாகத் தெரிகிறது. அவ்வாறு செய்கிறபோது அப்பாடல்களின் உண்மையான இசை மரபு, சொல்லாட்சிகள் முதலானவை மாறுபட்டு இப்பாடல் மரபே வேறொரு நிலைக்குச் செல்கிற துர்ப்பாக்கியம் நேர்ந்து விடுகிறது. குறிப்பிட்ட கலாசார மரபினையும் கிராமிய மணத்தோடு கூடிய சொற்களையும் தோற்றப்பொலிவையும் இலத்திரனியல் வழியாகக் கொண்டுவருவதில் மாறுபாடு நிகழ்ந்துவிடுகிறது. அதேபோல நாட்டார் பாடல்களிலே வழங்கும் பழி, பாவம், அம்மணச்சொற்கள் முதலானவை பாடுகிறவரின் நாகரிக மாற்றம் கருதி கைவிடப்படுகிற சூழ்நிலையும் இருக்கிறது. மொத்தத்தில் நாட்டார் வடிவங்களை பாவனை மரபில் ஊடக வழியாகக் கொண்டுவருவது பொருத்தமற்றது என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

நாட்டார் கதைகள் ஓரளவு அதனைச் செய்கின்றவர்களைக் கொண்டு சொல்லப்படுகிற நிகழ்ச்சிகளைக் கண்டுகொண்டாலும் அவற்றிலும் அதன் உண்மைத்தன்மை குறைந்து வருவதையே காணமுடிகிறது. பழமொழி, விடுகதைகள் முதலானவை இன்று இலத்திரனியல் வழியாக ஆவணப்படுத்துகிற முயற்சி பெரும்பாலும் இல்லையெனலாம். எனவே, நாட்டார் இலக்கிய வடிவங்களை அதனை இன்னும் ஆற்றுகின்றவர்களைக் கொண்டு நேரடியாகக் களத்தில் பதிவுசெய்வதன் மூலம் மாத்திரமே அவற்றின் உண்மைத்தன்மையைப் பேணமுடியும். இல்லாவிடில் அதன் உண்மையான வடிவத்தை நாம் இழக்கவேண்டி நேரிடலாம்.

நாட்டாரிலக்கிய வடிவங்கள் இன்று பொதுவாகவே பண்புநிலை மாற்றம் பெற்று வருகின்றன. மரபு ரீதியாக நாட்டுப்புற இலக்கியங்களுக்கு ஐந்து முக்கியமான பண்புகளைக் குறிப்பிடுவர்:

1. **நாட்டுப்புற இலக்கியங்கள் எனப்படுவது வாய்மொழியாகப் பரவுவது:** அதாவது மக்களிடையே ஒருவர் வாய்மொழியாகப் பாடுவதைக் கேட்டு பலர் பல இடங்களில் சூழ்நிலைக்குத் தக்கவாறும் நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறும் பாடப்படும் சிறப்புடையது.
2. **மரபு வழிப்பட்டது:** வழிவழியாக மக்களால் மரபு வழியில் பாடபப்படுவது.
3. **பல்வகையாகத் திரிந்து வழங்குவது:** பெரும்பாலும் செவிவழியே பரவும் இப்பாடல்கள் இடங்களைப் பொறுத்தும் நிகழ்ச்சிகளைப் பொறுத்தும் வெவ்வேறு சொற்களினால் குறிப்பிடப்படுவது.
4. **ஆசிரியர் இல்லாமை:** இப்பாடல்களை இயற்றிய ஆசிரியர் இவர்தான் என்று குறிப்பிட்டுப் பெயர் கூற முடியாமை.
5. ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது.

இந்தப் பண்பு நிலையிலிருந்து நாட்டுப்புற இலக்கியம் பெருமளவு மாறியிருக்கிறது எனலாம். வாய்வழியாகப் பரவுவதில் நின்றும் மாறி எழுத்து உருவத்திலும் காட்சிப்படுத்தலினூடாகவும் நாட்டாரிலக்கியங்கள் அளிக்கப்படுகின்றன. மரபு வழியாகப் பரவுவதிலும் நின்றும் மாறி புதிது புதிதாக ஆக்கப்படுகிற தன்மையையும் பெற்று வருகிறது. ஆசிரியர் தெரியாத சூழ்நிலையிலிருந்து மாறி அதனை இன்னார்தான் ஆக்கியிருக்கின்றார் என்ற தெளிவுடன் வருகிறது. இந்த மாதிரியான நிலைமாற்றத்தோடு வருகிற வாய்மொழி வடிவங்களை ‘அரைநிலை’ வாய்மொழி இலக்கியமென பேராசிரியர் சிவத்தம்பி (யோகராஜா, செ., 2002:111) குறிப்பிடுகிறார்:

> “எம்மிடையே இப்போதுஎழுதப்பட்ட – ஆனால்,வாய்மொழியாகக்கையளிக்கப்படுகின்ற சில பாடல்கள் உள்ளன. எழுதப்பட்டு, அச்சடிக்கப்பட்டு – ஆனால், இவற்றினுடைய பயில்நிலையில் அவை பெரும்பாலும் வாய்மொழியாகக் கையளிக்கப்படுகின்றன அல்லது துண்டுப் பிரசுரங்களாக விற்கப்படுகின்றன. இவற்றினை ஆங்கிலத்தில் Semi Oral Text என்பர். ஓரளவு வாய்மொழிப் பாடல்கள் அல்லது பாதி வாய்மொழிப் பாடங்கள் என்பர். இவற்றினை எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது முக்கியமான ஒரு விடயமாகிறது. மேற்கூறியவற்றை நாம் முற்றுமுழுதாக நாட்டார் மொழிப்பட்ட பாடல்களோடு சேர்த்துவிட முடியாது. ஏனென்றால் நாட்டார் பாடல் நிலைக்குள்ள ஆசிரியர் தெரியாமை அல்லது ஒரு ஒட்டுமொத்தக் கூட்டுநிலை ஆசிரியர் தன்மை இங்கு காணப்படவில்லை. இங்கு குறிப்பிட்ட ஒருவர் - கவிஞர் அல்லது புலவர் எழுதுவார். சிலவேளை அவரே அதனை மக்களுக்கு முன்னால் வாசிப்பார். இன்றேல் சிலர் வாங்கி வாசித்துக் காட்டி விற்பார்கள். ஆகவே, உண்மையில் இதனுடைய தொடர்பு வலு என்பது வாய்மொழி நிலைப்பட்டதுதான்.”

இது வேறு ஒருவகையான மாறுநிலை. ஆனால், இலத்திரனியல் ஊடகங்களின் ஊடான காட்சிப்படுத்தலோடு ஒலி வடிவங்களைக் கொண்டுவருகிறபோது நாம் மேலே கூறியதுபோல பல்வேறு காரணங்களால் நாட்டாரியலின் உண்மைத்தன்மை சிதைந்து போகிறதென்றே சொல்ல வேண்டும். இந்தக் கட்டத்தில்தான் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் முக்கியமான தேவையிருக்கிறது என்று சொல்லலாம்.

**பயன்பட்ட நூல்கள்:**


01. இராஜரட்ணம், எம்., ஆனந்தன், வீ., (1993), **“மட்டக்களப்பில் வாய்மொழி இலக்கியம்”,** மட்டக்களப்பு, சாகித்திய விழாக்கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

02. கந்தையா, வீ.சி., (1964), **“மட்டக்களப்புத் தமிழகம்”,** யாழ்ப்பாணம்.

03. சண்முகசுந்தரம், சு., (1975), **“நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம்”,** சென்னை இலக்கிய மாணவர் வெளியீடு.

04. சண்முகலிங்கம், க., (சித். 1992), (செப். 1992), (வைகா 1993), **பண்பாடு,** கொழும்பு. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

05. சிவநேசச் செல்வன், ஆ., (1980),“சிந்தனைத்திறனையும் பண்பாட்டுக் கூறுகளையும் தெளிவிக்கும் பழமொழிகளும் விடுகதைகள் வரலாறும் பண்பாடும்”,**இலங்கை தமிழ் நாட்டார் வழக்காற்றியல்,** யாழ்ப்பாணம்.

06. தில்லைநாதன், சி., (1983), “ஆறுதலும் உற்சாகமும் அளிக்கும் நாட்டார் பாடல்கள்”,**தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர்,** இலங்கை, இந்து ச.க.அ. திணைக்களம்.

07. நு.்மான், எம்.ஏ., (1983), “கிராமிய இலக்கியம் பற்றிய ஆய்வில் சமூக சந்தர்ப்பத்தின் முக்கியத்துவம்”,**தமிழ் சாகித்திய விழாசிறப்பு மலர்,** இலங்கை, இந்து ச.க.அ. திணைக்களம்.

08. யோகராஜா, செ., (2002), **ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு,** பண்பாட்டுத் திணைக்களம், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு, வ.கி.மா.

09. லூர்து, தே., (1968), **நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்,** திருநெல்வேலி, பாரிவேள், பதிப்பகம்.

10. லூர்து, தே., (1976), **நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம்,** திருநெல்வேலி.

11. லூர்து, தே., (1968), **நாட்டார் வழக்காற்றியல் கள ஆய்வு,** திருநெல்வேலி, பாரிவேள், பதிப்பகம்.

12. றமீஸ் அப்துல்லாஹ், (2001), **கிழக்கிலங்கை கிராமியம்,** மல்லிகைப்பந்தல், கொழும்பு.